செய்தி வெளியீடு எண் : 682 நாள் : 10.04.2023

# செய்தி வெளியீடு

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.19.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.4.2023) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 19.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தொல்பொருள் விளக்க மையம் மற்றும் காலநிலைப் பூங்கா, இரும்பு மற்றும் எஃகு வணிக அங்காடியில் அமைக்கப்படவுள்ள திண்கரை (கான்கிரீட்) சாலைப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

<u>சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்</u>

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வண்டலூர், கிளாம்பாக்கத்தில் உள்ள புதிய புறநகர் பேருந்து முனையம் அருகில் தொல் பொருள் விளக்க மையம் மற்றும் காலநிலைப் பூங்கா 16.90 ஏக்கர் பரப்பளவில் 14.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார். இப்பூங்காவானது பல பொழுது போக்கு அம்சங்கள், கலாச்சாரம், நகர்ப்புற சூழலியல் வாழ்விடம், தொல்பொருள் விளக்கம் போன்றவற்றை உள்ளடக்கி அமைக்கப்படவுள்ளது. மேலும், இப்பூங்கா பேருந்து முனையத்தில் உள்ள கரியமில வாயு வெளியேற்றத்தை குறைத்திட உதவும்.

சாத்தாங்காட்டில் இரும்பு மற்றும் எஃகு வணிக அங்காடியில் 4 ஏக்கர் பரப்பளவில் கனரக வாகன நிறுத்தும் இடத்தை இரண்டு பகுதிகளாக திண்காரை (கான்கிரீட்) சாலையாக 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., கூடுதல் செயலாளர் திருமதி மு. விஜயலட்சுமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in